**செ. கு. எண்: 016** **நாள் :10.01.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 10.1.2016

விளையாட்டு மற்றும் இளைஞர் நல மேம்பாட்டில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடும் வகையில் தமிழ்நாட்டில் பன்னாட்டுத் தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு போட்டிகளில் பங்கு கொள்வதை ஊக்குவிக்கும் விதமாக ஊக்கத் தொகை வழங்குதல், உள்விளையாட்டு அரங்கங்களை அமைத்தல், கிராம விளையாட்டுப் போட்டிகளை மேம்படுத்துதல், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை தமிழகத்தில் நடத்துதல், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பொறியியல் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை உயர்த்தியது போன்ற எண்ணற்ற திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

வாள்வீச்சு போட்டியில் சிறந்து விளங்கும் வீராங்கனை செல்வி சி.எ. பவானிதேவியை ஊக்குவிக்கும் வகையில், அவர் அமெரிக்காவிற்குச் சென்று பயிற்சி பெற ஏதுவாக கடந்த **8.10.2015** அன்று மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டேன்.

கடந்த **18.10.2015** அன்று பெல்ஜியத்தில் நடைபெற்ற **18**வது பிளமிஷ் ஓப்பன் வாள்வீச்சுப் போட்டிகளில் மகளிர் சேபர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்தமைக்காக, அவரை பாராட்டி கடந்த **28.12.2015** அன்று இரண்டு லட்சம் ரூபாய் காசோலையை நான் அவருக்கு வழங்கினேன்.

2011 – 2012ம் ஆண்டில் என்னால் அறிமுகப்படுத்தப்பட்ட **“உயர்மட்ட விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகைத் திட்டம்”** (Special Scholarship for Elite Sports Persons) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, விளையாட்டுத் திறமைகளின் அடிப்படையில், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லக் கூடிய 5 தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 25 லட்சம் ரூபாய் வீதம் 5 ஆண்டுகளுக்கு தேவைக்கேற்ப நிதி உதவிகள் செய்யப்பட்டு, அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் வெல்ல வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இந்த **“உயர்மட்ட விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகைத் திட்டத்தில்”** ஏற்கெனவே உள்ள 5 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுடன், ஒரு சிறப்பினமாக, வாள்வீச்சு விளையாட்டில் பல்வேறு நிலையிலான சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் மற்றும் சாதனைகள் புரிந்து வரும் சென்னையைச் சேர்ந்த செல்வி சி.எ.பவானிதேவியையும் சேர்த்திட நான் ஆணையிட்டுள்ளேன். இதன் காரணமாக செல்வி சி.எ.பவானிதேவி மேலும் பல வெற்றிகள் பெற ஏதுவாகும் என நான் நம்புகிறேன். அவர் சர்வதேச போட்டிகளில் மேலும் பல வெற்றிகள் பெற எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**